வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 14.05.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 135 பக்கங்கள் : 12


# பொருளாதார சீர்திருத்தத்தை பாராட்டுகின்றது அமெரிக்கா!

## ஜனாதிபதியிடம் கூறினார் டொனால்ட் லூ

கொழும்பு, மே. 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார சீர்திருத்த திட்டங்களுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

11



## முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய நான்கு பேரும் விளக்கமறியலில்!

திருமலை, மே. 14

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை - சேனையூர் பகுதியில் கஞ்சி பரிமாறியதாக கைது செய்யப்பட்ட நால்வரும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை - சேனையூர் பிள்ளையார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் வாரத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் கஞ்சி வழங்கப்பட்டது.

இதன்போது அங்கு சென்ற சம்பூர் பொலிஸார் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதால் கஞ்சி பரிமாறுவதை நிறுத்துமாறு அறிவித்தனர்.

நீதிமன்ற உத்தரவை மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை கைது செய்வதற்காக சம்பூர் பொலிஸார் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் 3 பெண்களும் ஆணொருவரும் கைது செய்யப்பட்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

11

## பேஸ்புக் விளம்பரங்களை நம்பி மோசடிகளுக்கு அகப்படாதீர்கள்!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 14

பேஸ்புக் விளம்பரங்களை நம்பி ஏமாற்றமடையும் தரப்பினர் இன்றும் உள்ளனர். ரஷ்யாவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தருவதாகக் குறிப்பிட்டு ஒரு தரப்பினரால் முன்னெடுக்கப்படும் மோசடிகளுக்கு அகப்பட வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

ரஷ்ய யுத்தக் களத்தில் உயிரிழந்த இலங்கையர்களின் உடல்கள் அடையாளப்ப டுத்தப்பட்டுள்ளன. மிகுதியாக உள்ள வர்களை நாட் டுக்கு அழைத்துவர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்களை



11

## இலங்கையர்களை ரஷ்ய யுத்த களத்துக்கு அனுப்பும் மோசடியில் முன்னாள் தூதுவரா?

### சபையில் சந்தேகம் வெளியிட்ட எதிர்க்கட்சி எம். பி.

கொழும்பு, மே 14

ரஷ்ய யுத்த களத்துக்கு இலங்கையர்களை சட்டவிரோதமான முறையில் அனுப்பும் மோசடியின் பின்னணியில் ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் தொடர்புப்பட்டுள்ளாரா என்ற சந்தேகம் எழுகிறது. ரஷ்ய யுத்தக் களத்தில் 74 இலங்கையர்கள் உயிரிழந்தனர். ஆகவே இவ்விடயம் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிரணியின் சுயாதீன உறுப்பினர் காமினி வலேபொட சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகை யில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

11

## குடும்பமொன்றின் மாத செலவு கடந்த ஆண்டில் 103,283 ரூபா!

கொழும்பு, மே. 14

இலங்கையில் நிலவி வரும் பணவீக்கம் காரணமாக குடும்பமொன்றின் நுகர்வு செலவு 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2023ஆம் ஆண்டில் 103,283 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள பொருளாதார விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நூற்றுக்கு 16.5 வீதத்தால் அதிகரிக்கப் பட் டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின் அடிப்படையில், இந்நாட்டில் குடும்பமொன்றுக்கு 2022ஆம் ஆண்டில் மாதாந்த நுகர்வு செலவு 88,704 ரூபாவாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

11

## விஜயதாசவின் கடமைக்கு இடையூறு விளைவிக்க தடை

கொழும்பு, மே. 14

சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் சுதந்திரக் கட்சியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பதில் செயலாளர் கீர்த்தி உடவத்த ஆகியோரின் கடமைக்கு இடையூறு விளைவிப்பதைத் தடுத்து நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான விடயங்களை பரிசீலித்த கடுவல நீதமான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து தான் விலகுவதாக மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற செயற்குழு

11

## மின்சார சபை மறுசீரமைப்பு திட்டமிட்டபடி நடைபெறும்!

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, மே. 14

மின்சார சபை மறுசீரமைப்பு பணிகள் திட்டமிட்டவாறு முன்னெடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிக்கை தொடர்பாக பாராளுமன்றில் நேற்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

இது குறித்து மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர

11

## முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாக சபையில் சிரட்டை சமர்ப்பித்தார் சிறிதரன்

கொழும்பு, மே. 14

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை நினைவு கூர்ந்து சிரட்டை ஒன்றை சபாபீடத்துக்கு சமர்ப்பித்து அதனைப் பாராளுமன்ற நூதனசாலையில் வைக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நிதிக் கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த மாதம் எமக்கு மிகவும் முக்கியமானது. எமது வேதனைகளை வெளிப்படுத்துகிறது. நான் இந்த "சிரட்டையை

11

## அமெ.இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ இலங்கை வந்தார்

கொழும்பு, மே. 14

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலர் டொனால்ட் லூ இம்மாதம் 10 - 15 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள நிலையில் நேற்றுக் காலை இலங்கைக்கு வருகை தந்தார்.

இவ்விஜயம் இந்நாடுகளுடனான அமெரிக்காவின் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதையும், சுதந்திரமானதும், சுபீட்சமானதுமான இந்திய - பசுபிக் பிராந்தியத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா வழங்கிவரும் ஆதரவை வெளிப்படுத்து

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

டான் ரிவியில் ஒரு நிகழ்ச்சி முன்னர் ஒளிபரப்பாகியது. பாடசாலை மாணவர் ஒரு வரை அழைத்து அவரிடம் பத்து பொது அறிவு கேள்வி களைக் கேட்பார்கள். அவர் பதில் சொல்கின்ற ஒவ்வொரு கேள்விக்கும் பரிசு வழங்கப்ப டும்.

நிகழ்ச்சி நடாத்துபவர் தனது கைகளில் கேள்விகள் எழுதிய காகித அட்டைகளை வைத்திருப்பார். போட்டியில் கலந்துகொள்கின்றவர் ஒரு அட்டையை எடுத்து தொகுப் பாளரிடம் கொடுக்க அவர் கேள்வியைக் கேட்பார்.

ஒரு நிகழ்ச்சியை இந்த ஊர்க்குருவி பார்த்துக்கொண்டி ருந்தபோது, அதில் கலந்து கொண்ட ஒரு மாணவன், அவன் அப்போது பத்தாம் ஆண்டில் படித்துக்கொண்டி ருந்தான்.

ஒவ்வொரு கேள்விக்காக வும் அவன் ஒவ்வொரு அட் டையை எடுத்துக்கொடுக்க, தொகுப்பாளர் கேள்வியைக் கேட்க, அவன் எந்தக் கேள் விக்கும் சரியான பதிலைச் சொல்லவில்லை.

கடைசியாக பத்தாவது கேள்வி. இதனையும் அவர் கையில் இருக்கும் அட்டைக ளிலிருந்து கேட்காமல், மிக இலகுவான கேள்வி ஒன்றைக் கேட்டு, அந்த மாணவனுக்கு ஒரு கேள்விக்காவது பதில் சொல்லவைக்க நினைத்தாரோ தெரியவில்லை, தொகுப்பா ளர் தானாகவே ஒரு இலகு வான கேள்வியைக் கேட்டார்.

"இந்த நாட்டின் ஜனாதி பதி யார்?" இதுதான் கேள்வி. மாணவன் பதில் சொன்னார்: "டக்ளஸ் தேவானந்தா".

இந்தச் சம்பவம் தான் அந் தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்திற்கு வந்தது.

தமிழ் அரசுக்கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் அவர்கள் இடையிடையே அறிக்கைகளை விடுத்து, தானும் இன்னமும் தமிழர் அரசியலில்தான் இருக்கிறேன் என்பதை காண்பித்து வருகி றார்.

கடைசியாக அவர் தெரி வித்ததாக கொழும்பு பத்தி ரிகை ஒன்று செய்திவெளி யிட, அதனை அப்படியே "கொப்பி" பண்ணி அனேக மாக எல்லா ஊடகங்களுமே அதனை வெளியிட்டுள்ளன. ஈழநாடும் அதனை வெளியிட தவறவில்லை.

அந்த செய்தியில் அவர் எங்கு சொன்னார், எப்படிச் சொன்னார் என்பது பற்றிய விபரம் இருக்கவில்லை. அவர் ஊடகர் ஒருவருக்கு சொல்லி யிருந்தால் நல்லதுதான்.

ஆனால் அப்படிச் சொல் லியிருந்தால், அவர் சொல் வதை அப்படியே கேட்டு ஊடகர்கள் செய்தி எழுது வார்களோ தெரியவில்லை. அவரிடம் அவர் சொல்கின்ற விடயங்களிலிருந்தே சில கேள்விகளைக் கேட்டு அதற் கான பதிலையும் அவர்கள் பெற்று வெளியிட்டிருக்கலாம்.

இப்படி எழுதுவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. அவர் கடைசியாக சொன்ன தாக வெளிவந்த செய்தியில் அவர், "ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒரு வரை நிறுத்தும் விடயத்தில் தீர்மானம் எடுப்பதற்கு அவச ரப்படவேண்டாம் என இலங்கை தமிழ் அரசுக் கட்சி உட்பட அனைத்து தரப்பிட மும் வேண்டுகோள் விடுத்துள் ளார் என்றது அந்தச் செய்தி.

அதற்கு பின்னதாக அவர் சொன்னதுதான், "கிளைமாக்ஸ்".

"நாட்டின் நீண்ட வர லாற்றை பார்க்கின்றபோது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதி யாக வரமுடியும் என்ற நிலை மைகள் உள்ளன.

இந்த நிலையில் தென்னி லங்கையின் தேசியக் கட்சிகள் தற்போது வரையில் உத்தியோ கபூர்வமாக தங்களது ஜனாதி பதி வேட்பாளர் பற்றிய அறி விப்புக்களைச் செய்யவில்லை." என்கிறார் சம்பந்தன்.

இதுவரை ரணில் விக்கிரம சிங்க மட்டுமே உத்தியோக பூர்வமாக தான் போட்டியிட விருப்பதாக அறிவிக்கவில்லை. அது தவிர பொதுஜன பெர முன வேட்பாளரை நிறுத்துமா அல்லது ரணிலை ஆதரிக்குமா என்பது இதுவரை தெரியவர வில்லை.

இந்த இருவர் பற்றியும் ஐயா அக்கறைப்பட்டு அதற்காக காத்திருக்க மாட்டார் என்பது நமக்குத் தெரிந்ததுதான். ராஜ பக்சக்களை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த மூன்று ஜனாதிபதி தேர் தல்களிலும் தமிழ் மக்களை அவர்களுக்கு எதிரான வேட் பாளர்களுக்கு வாக்களிக்கச் சொன்னவர் இவர். எனவே மகிந்த ஆதரவுடன் போட்டி யிட்டால் ரணிலுக்கும் அவர் ஆதரவு வழங்கப்போவதில்லை. அப்படியல்லாமல் ரணில் வேறு சில கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிட்டாலும், அவர் பதின்மூன்றுக்கு மேலே போகப் போவதில்லை என்பது மாத்தி ரமல்ல, அதிலும் பொலிஸ் அதி காரம் இல்லாத பதின்மூன் றைத்தான்- அதாவது பதின் மூன்று மைனஸ், அவர் தரு வேன் என்று ஏற்கனவே பகி ரங்கமாக அறிவித்து விட்டார்.

பதின்மூன்றை எமது தீர் வாக தொட்டும் பார்க்கமாட் டோம் என்று நீண்டகாலமாக அடம்பிடித்துவரும் சம்பந்தன் ஐயா, நிச்சயம் ரணிலுக்காக காத்திருக்கமாட்டார்.

அதையும்விட, அவர் சொல் லியிருப்பதில் முக்கியமானது, "நாட்டின் நீண்ட வரலாற்றை பார்க்கின்றபோது, பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாக வர முடியும் என்ற நிலை" இருப்ப தாக அவர் சொல்லியிருப்பது, ஏதோ தமிழ் பொது வேட்பா ளர் வெற்றிபெற்று ஜனாதிபதி ஆகுவதற்குத்தான் என்று- அர சியலில் மூன்றாம் வகுப்பு மாண வனுக்கும் தெரிந்த ஒரு விட யத்தை தனக்கு தெரியாதது போல ஐயா சொல்லியிருக்கின் றார்.

தமிழ் வேட்பாளர் தேர்த லில் போட்டியிடுவது வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனா திபதி ஆகுவதற்கு என்றுதான் நினைத்துக்கொண்டு, அவசரப் படவேண்டாம் என்கிறாரோ?. வெற்றிபெறமுடியும் என்றால் தானே கேட்போம் என்று நினைக்கிறாரோ என்னவோ?!

- ஊர்க்குருவி

# சம்பள உயர்வு கோரி போராட்டம்










யாழ்ப்பாணம், மே 14

**யாழ்ப்பாணம்**

நாடளாவிய ரீதியில் அரச பல்கலைக்கழக ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி நேற்றுத் திங்கட்கிழமை போராட்டத் தில் ஈடுபட்டனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றி யப் பிரதிநிதிகளின் பங்கேற்பு டன் கவனவீர்ப்புப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10 மணியள வில் யாழ். பல்கலைக்கழக நுழை வாயிலில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**வவுனியா**

வவுனியா பல்கலைக்கழக பூங்காவீதி அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததன் பின்னர் அலுவ லக வாயிலிலிருந்து ஆரம்ப மான ஊர்வலம் ரயில் வீதியூடாக பழைய பஸ் நிலையம் வரை சென்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது MCA கொடுப் பனவை அதிகரி, அரசே 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியவாறு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு வவுனியா பல்கலைக் கழக கல்விசார் ஊழியர் சங்கம் மற்றும் மாணவர் சங்கமும் ஆத ரவு வழங்கியிருந்தது.

**கண்டி**

கண்டி நகரில் நேற்று முற்ப கல் 11 .30 மணியளவில் பல்க லைக்கழக கல்விசாரா ஊழியர்க ளால் வேலைநிறுத்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தங்கள் கோரிக்கை தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாது போனால் தீவிரமான முறையில் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெ டுக்கப்படுவது மட்டுமன்றி சேவைகளில் இருந்தும் ஒதுங் கிக் கொள்ளப்போவதாகவும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் சங்கம் எச்சரித்துள் ளது.

(எ)

# மே தினக் கூட்டங்களை தடை செய்யுமாறு பொலிஸார் ஏன் நீதிமன்றை நாடவில்லை?

## அம்பிகா சற்குணநாதன் கேள்வி



கொழும்பு, மே 14

நோய் பரவும் ஆபத்து எனத் தெரிவித்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலை தடுத்த பொலி ஸார் ஏன் மே தினக் கூட்டங்க ளைத் தடை செய்யுமாறு நீதி மன்றங்களை கேட்டுக்கொள்ள வில்லை- இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கு ழுவின் முன்னாள் ஆணையா ளர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதே காரணத்துக்காக வெசாக் நிகழ்வுகளை தடை செய்யுமாறு நீதிமன்றத்திடம் பொலிஸார் வேண்டுகோள் விடுப்பார்களா? எனவும் அவர் வினவியுள்ளார்.

வரலாற்றை அழிப்பதும் பொதுமக்களின் உயிரிழப்புக்கு அரசாங்கம் காரணமில்லை என்று மறுப்பதுவுமே நினை வேந்தல்களைத் தடுப்பதன் நோக்கம் எனவும் அம்பிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் ஒன்றுகூடுவதன் மூலம், உணவைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் நோய் பர வும் என்பதாலேயே தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக நீதிமன்ற உத்தரவில் தெரிவிக் கப்பட்டுள்ளது. அப்படியா னால் ஏன் மே தினக் கூட்டங்க ளைத் தடை செய்யுமாறு பொலி ஸார் நீதிமன்றங்களைக் கேட் டுக்கொள்ளவில்லை.

வெசாக் கொண்டாட்டங்க ளையும், தேர்தல் பிரசார பேர ணிகளையும் தடை செய்யுமாறு பொலிஸார் நீதிமன்றங்களிடம் வேண்டுகோள் விடுப்பார்களா? இவ்வாறான அடுக்குமுறைகள் காரணமாகவே ரணில் விக்கிர மசிங்க அரசாங்கத்தின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைக்கும் முயற்சி களை ஜெனிவாவில் மற்றுமொரு தீர்மானத்தை தடுப்பதற்கான ஏமாற்று நடவடிக்கை என தமிழ் மக்கள் கருதுகின்றார்கள் எனவும் அம்பிகா தெரிவித்துள் ளார்.

தமிழ் மக்கள் மீதான பொலி ஸாரின் அராஜகங்களுக்கு எதி ராக எதிர்க்கட்சியினர் குரல் கொடுப்பார்களா? எனவும் அவர் எழுப்பியுள்ளார். (எ)

# மரக்கறிகளின் விலையில் மாற்றம்!

தம்புள்ளை, மே 14

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மரக்கறிகளின் விலைகளில் மாற்றங்கள் ஏற்பட் டுள்ளன.

இதன்படி, ஒரு கிலோ கரட் 120 ரூபாயாகவும், ஒரு கிலோ பீன்ஸ் 60 / 80 ரூபாயாகவும், ஒரு கிலோ கோவா 50/60 ரூபாயாகவும், ஒரு கிலோ லீக்ஸ் 200 / 220 ரூபாயாகவும், ஒரு கிலோ தக்காளி 70/80 ரூபா யாகவும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 100 ரூபாயாகவும், ஒரு கிலோ கறி மிளகாய் 150/160 ரூபாயாகவும்,ஒரு கிலோ முள் ளங்கி 40/50 ரூபாயாகவும்,ஒரு கிலோ கத்தரிக்காய் 100/140 ரூபாயாகவும், ஒரு கிலோ பூச ணிக்காய் 60/70 ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டன.

மேலும், ஒரு கிலோ வெண் டைக்காய் 100/120 ரூபாயாக வும், ஒரு கிலோ பீர்க்கங்காய் 150ஃ160 ரூபாயாகவும், ஒரு கிலோ பீட்ரூட் 210 ரூபாயாக வும்,ஒரு கிலோ வெங்காயத் தாள் 100/130 ரூபாயாகவும்,ஒரு கிலோ தேசிக்காய் 1,200 ரூபா யாகவும்,ஒரு கிலோ இஞ்சி 2500/3200 ரூபாயாகவும் விற் பனை செய்யப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.05.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், வைகாசி 01

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சம்பந்தனின் அறிவுரை பொருத்தப்பாடுடையதா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் கட்சிகள் அவசரப்படக் கூடாது - குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இந்த விடயத்தில் அவசரப்படக் கூடாது, நிதானமாக செயல்பட வேண்டுமென்று, மூத்த அரசியல்வாதி சம்பந்தன் அறிவுரை கூறியிருக்கின்றார். இதற்கு முன்னரும் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் சம்பந்தன் எதிர்மறையான கருத்துக்களையே தெரிவித்திருந்தார்.

சம்பந்தன் தற்போது அரசியலில் இயங்கும் நிலையில் இல்லை. ஊடகங்கள் அணுகினால், அவ்வப்போது கருத்துக்களைத் தெரிவிக்கும் ஒருவராகவே இருக்கின்றார். இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டில் அவசரப்பட வேண்டாமென்று சம்பந்தன் கூறுவதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. சம்பந்தன் இந்த விடயத்தில் மட்டுமல்ல, கடந்த பதினைந்து வருடங்களாக தமிழ் மக்களின் அரசியல் விடயங்கள் எவற்றிலுமே அவசரப்படவில்லை - நிதானமாக கொழும்பின் நிகழ்ச்சி நிரலுக்கு பின்னால் இழுபட்டுச் செல்லும் ஒருவராகவே இருந்திருக்கின்றார்.

இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும், அவசரப்பட வேண்டாமென்றே கூறினார். டில்லியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அலுவலகத்தை திறக்க வேண்டும், அதன் மூலம் அங்குள்ள இராஜதந்திர தரப்புக்கள், சிந்தனைக் கூடங்கள், ஊடகங்கள் அனைத்துடனும் தொடர்ச்சியான உரையாடலில் ஈடுபட வேண்டும் - அப்போதுதான், இழக்கப்பட்ட இந்திய கரிசனையை மீட்டெடுக்க முடியுமென்று, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எடுத்துரைத்த போது - அப்போதும் அவசரப்பட வேண்டாம் என்றே குறிப்பிட்டிருந்தார்.

ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து முற்றிலும் சாதகமானதொரு அரசியல் சூழல் ஏற்பட்டிருந்தது. புதிய அரசியல் யாப்பு தொடர்பில் சம்பந்தன் பேசினார். அதன் சாத்தியமின்மை தொடர்பில் சம்பந்தனிடம் எடுத்துரைக்கப்பட்டது. அரசமைப்பில் இருக்கின்ற 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயங்களை முதலில் சாத்தியப்படுத்துவதே சரியானது. தற்போது, முற்றிலும் சாதகமான சூழல் தென்னிலங்கையில் இருக்கின்றது - நிச்சயமாக புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவரவே முடியாது - என்று சம்பந்தனிடம் ஏனைய கட்சிகளும் புத்திஜீவிகளும் வலியுறுத்தியிருந்தனர். அப்போதும் சம்பந்தன் நாங்கள் அவசரப்படக் கூடாது, நிதானமாக பயணிக்க வேண்டும் என்றே குறிப்பிட்டிருந்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் டில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்த போது, சிறுபிள்ளைகள் போல் பதிலளித்து, அதனை தவிர்த்திருந்தார். அப்போதும் நாங்கள் அவசரப்படக் கூடாதென்னும் பதிலே சம்பந்தனிடமிருந்து வந்தது.


கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ, இந்தியாவின் தலையீட்டைக் கோரி, இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பும் முயற்சியை மேற்கொண்ட போதும், அப்போதும் சம்பந்தன் அவசரப்படக் கூடாதென்றே குறிப்பிட்டிருந்தார்.

கடந்த பதினைந்து வருடங்களாக சம்பந்தனின் அவசரப்படாத அணுகுமுறையால் தமிழ் மக்களுக்கு கிடைத்தது என்ன? கல்முனை பிரதேச செயலகப் பிரச்னையை கூட, சம்பந்தனால் தீர்த்து வைக்க முடிந்திருக்கவில்லை. அந்த மக்கள் வீதியில் நிற்கின்றனர். இனியும் தமிழ்க் கட்சிகளை - குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை அவசரப்பட வேண்டாமென்று சம்பந்தன் குறிப்பிடுகின்றார் என்றால் - சம்பந்தன் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் சிறிதும் கரிசனையில்லாத ஒருவராகவா இருக்கின்றார்?

# யாழ். பல்கலை. மாணவர்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று வழங்கப்பட்டது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக விஞ்ஞானபீட நுழைவாயிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது மக்கள் துன்பப்பட்டு, வறுமைப்பட்டு, உணவு இல்லாமல் தவித்தனர். சிறுவர்களும் வயோதிபர்களும் சொல்ல முடியாத பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாயினர். வலிகள் நிறைந்த அந்த நேரத்தில் கஞ்சி தான் இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் உயிரைக் காத்தது. அந்த நினைவாக ஒவ்வொரு வருடமும் மே மாதம் 11, 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ)

'குறைந்தபட்ச அரசு - அதிகபட்ச ஆட்சி'

# இலங்கை அரச அதிகாரிகளுக்கு இந்தியாவில் விசேட பயிற்சிகள்

உத்தரகாண்ட், மே 14

இலங்கை அரச அதிகாரிகளுக்கான இரு வார கால திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் இந்தியாவின் உத்தரகாண்ட், முசோரியிலுள்ள நல்லாட்சிக்கான தேசிய மையத்தில் நேற்று ஆரம்பமாகியது.



இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுத் துறை அமைச்சின் கீழான இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பாக பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை சுங்கம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு உள்ளிட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பணிப்பாளர்கள், சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், உதவிச் செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் கடமையாற்றும் இலங்கையைச் சேர்ந்த 40 சிரேஷ்ட சிவில் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் நல்லாட்சிக்கான தேசிய நிலையத்தால் நடத்தப்படுவதுடன், “குறைந்தபட்ச அரசு - அதிகபட்ச ஆட்சி“ என்ற கொள்கையின் கீழ் அரசையும் மக்களையும் மேலும் நெருக்கமாக்குவதற்கான டிஜிற்றல் தொழில்நுட்ப முறைமைகளைத் தழுவும் வழிமுறைகள் குறித்தும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் ஆராயப்படும்.

ஆட்சி முறையையும் பொதுச் சேவை விநியோகத்தையும் மேம்படுத்துவதற்காக இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்துகொள்வதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

(எ)

# மாணவி பாலியல் துஷ்பிரயோகம் பாடசாலை பஸ் சேவை சாரதி கைது

கொழும்பு, மே 14


பாடசாலை மாணவியை ஏமாற்றி ஆள் நடமாட்டமற்ற இடத்துக்கு கூட்டிச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் பாடசாலை பஸ் சேவை சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குளியாப்பிட்டிய தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது பாடசாலை பஸ் சேவை சாரதியான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் பாதிக்கப்பட்ட மாணவியும் பாடசாலை பஸ் சேவையின் போது அறிமுகமாகியுள்ள நிலையில் இருவரும் காதல் உறவில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 14 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 01
நல்ல நேரம் : 07.30 - 09.30
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சூனிய




**மேடம்**
கடந்த காலத்தின் சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். உத்தியோகத்தில் அமைதி நிலவும்.வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**இடபம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரம் செழிக்கும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கடகம்**
ராசிக்குள்சந்திரன்நீடிப்பதால்வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன் படுத்துவது நல்லது. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசிவசூலிக்கப் பாருங்கள். அதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவை.

**கன்னி**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தை புது இடத்திற்கு மாற்றுவீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதுஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்சனங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**மகரம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய முயற்சிகள் யாவும்வெற்றியடையும். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

# தி. மு. க.வின் 3 ஆண்டு ஆட்சி செயலற்ற - பொய்யாட்சியே!

## ஓ. பி. எஸ். கடும் சாடல்

சென்னை, மே 14

உண்மையில் தமிழ்நாட்டில் 'செயலற்ற' ஆட்சி, 'பொய்யாட்சி' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் 'பொய்யாட்சி' தூக்கி எறியப்பட்டு 'செயலாட்சி' ஏற்படுத்தப்படும்- இவ்வாறு முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



முன்னாள் முதலமைச்சர் ஓ. பி. எஸ். வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தமிழ்நாட்டில் செயலாட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். தி .மு. க.வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு சமையல் எரிவாயு சிலிண்டருக்கு 100 ரூபாய் மானியம், ஒவ்வொரு மாதமும் மின் கட்டணம் செலுத்தும் முறை, பெற்றோல் விலை லீற்றருக்கு 5 ரூபாய், டீசலுக்கு 4 ரூபாய் குறைப்பு, 60 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு உதவித் தொகை 1500 ரூபாய் ஆக உயர்த்துவது உள்ளிட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

500 இடங்களில் மலிவு விலை உணவகங்கள் அமைக்கப்படவில்லை. 90 நாட்களில் கொடநாடு கொலை வழக்கு முடிக்கப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

அன்றாடம் கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வு நடைபெற்று வருகிறது. மணல் கடத்தல், அரிசி கடத்தல், கள்ளச்சாராயம் கொடி கட்டி பறக்கின்றன. தமிழ்நாடு போதை நாடாக மாறிவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# நாகப்பட்டினம் எம். பி. செல்வராசு காலமானார்

சென்னை, மே 14

நாகப்பட்டினம் மக்களவை தொகுதி உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான எம். செல்வராசு காலமானார். சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை காலமானார். அவருக்கு வயது 67.



1989 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் பாராளுமன்றத் தொகுதியில் பேட்டியிட்டு வெற்றி பெற்று முதன் முறையாக மக்களவைக்கு சென்றவர். தொடர்ந்து 1996, 1998, 2019 ஆகிய ஆண்டுகளில் நாகப்பட்டினம் பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்த நிலையில் உடல் நலக் குறைவால் சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று அதிகாலை காலமானார்.

இவரது மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# விஜய் கட்சி நிர்வாகிகள் பட்டியல் வெளியீடு ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்க முடியும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

சென்னை, மே 14

நடிகர் விஜய் கட்சியின் நிர்வாகிகள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆட்சேபனை இருந்தால் பொதுமக்கள் தெரிவிக்கலாம் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.



நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கினார். அப்போதே கட்சியின் பெயர், தலைமை நிர்வாகிகள் பெயர் பட்டியலை பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் டில்லியிலுள்ள இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவிடம் பதிவு செய்தார்.

அந்தவகையில், தமிழக வெற்றிக் கழகம் பெயர் மற்றும் நிர்வாகிகள் பட்டியலை தேர்தல் ஆணைக்குழு பத்திரிகையில் விளம்பரமாக வெளியிட்டுள்ளது. (எ)

# சவுக்கு சங்கர் உட்பட யார் மீதும் பொய் வழக்கு போடவேண்டிய அவசியமில்லை

## அமைச்சர் ரகுபதி தெரிவிப்பு

புதுக்கோட்டை, மே 14

சவுக்கு சங்கர் காரில் கஞ்சா கைப்பற்றப்பட்டதற்கு உரிய சாட்சிகள் இருக்கின்றன. அவர் உட்பட யார் மீதும் பொய் வழக்குப் போட வேண்டிய அவசியம் தமிழக அரசுக்கு இல்லை- இவ்வாறு சட்டத் துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.



புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே தி. மு. க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள நீர்மோர் பந்தலை திறந்துவைத்த பின்னர் அமைச்சர் ரகுபதி செய்தியாளர்களிடம் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆம் ஆத்மி கட்சித் தலைவர், டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால பிணை வழங்கியது வரவேற்கத்தக்கது. இந்தியா கூட்டணியின் மீது வெறுப்பை உருவாக்கும் வகையிலான பிரதமரின் பிரசாரம், பா. ஜ. க. தோல்வியை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் வகையில் உள்ளது.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தொழிலாளர் இலங்கைக்கு அனுப்பும் பணம் 11.4 வீதம் அதிகரிப்பு!

## ஏப்ரல் மாதத்தில் மட்டும் 543 மில்லியன் டொலர்

கொழும்பு, மே. 14

**புலம்பெயர் தொழிலாளர்கள் இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களில் மாத்திரம் 2 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகளவான பணத்தைச் சட்ட ரீதியான வங்கி முறையில் இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஏப்ரல் மாதத்தில் மட்டும் புலம்பெயர் தொழிலாளர்கள், சுமார் 543 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில், இது 11.4 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் மட்டும் இந்த நாட்டுக்கு வெளிநாட்டுப் பணம் அனுப்பப்பட்ட தொகை 19.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

(அ)

# 1 கிலோ 760 கிராம் கஞ்சா கிளிநொச்சியில் சிக்கியது

கிளிநொச்சி, மே. 14

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியான கனகபுரம் மற்றும் விவேகானந்தா நகர் பகுதிகளில் ஒரு கிலோவும் 760 கிராம் கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடி கிடைத்த தகவலுக்கு அமைய மோட்டார் சைக்கிளை வழிமறித்துச் சோதனைக்கு உட்படுத்த முற்பட்டவேளையில் மோட்டார் சைக்கிளையும் ஒரு கிலோ 500 கிராம் கஞ்சாவையும் கைவிட்டு அவர் தப்பிச் சென்றுள்ளார்.

இதேபோன்று கிளிநொச்சி பொலிஸ் மது ஒழிப்புப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து வீதியில் சென்றுகொண்டிருந்த இரண்டு சந்தேக நபர்களை சோதனைக்கு உட்படுத்தியபோது அவர்களிடமிருந்து 260 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# கணவரைக் கொலை செய்து ஆற்றில் வீசிய மனைவி கைது!

கொழும்பு, மே. 14

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த கணவரைக் கொலை செய்துவிட்டு சடலத்தை கிரிபாவ ஆற்றில் வீசியதாகக் கூறப்படும் மனைவி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக கிரிபாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிபாவ பிரதேசத்தைச் சேர்ந்த உதயகுமார என்ற 32 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

33 வயதுடைய சந்தேக நபரான பெண், தனது கணவரைக் கொலை செய்துவிட்டு சடலத்தை முதுகில் சுமந்து கொண்டு சென்று கிரிபாவ ஆற்றில் வீசியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# மனிதப் பாவனைக்கு உதவாத நிலையில் 1 இலட்சத்து 70ஆயிரம் கிலோ அரிசி மீட்பு!

கொழும்பு, மே. 14

ஒரு இலட்சத்து எழுபதாயிரம் கிலோ கிராம் அரிசி மனித பாவனைக்குத் தகுதியற்றதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நுகர்வோர் அதிகாரசபையின் அனுராதபுரம் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு இலட்சத்து எழுபதாயிரம் கிலோகிராம் அரிசியை 08 லொறிகள் மூலம் தனியார் அரிசி ஆலைக்கு கொண்டு சென்று மீண்டும் பொதி செய்துகொண்டிருந்த போதே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரிசியின் பொதிகளில் எழுதப்பட்ட திகதி கடந்த 30ஆம் திகதி காலாவதியாகியிருந்த நிலையில் காலாவதித் திகதி அடுத்த 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

அத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் திட்டத்துக்கு இந்த அரிசியை அரசாங்கம் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் நுகர்வோர் அதிகாரசபையினால் கையகப்படுத்தப்பட்ட அரிசி கையிருப்பு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், அரிசி ஆலையின் உரிமையாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அடுத்துவரும் சில தினங்கள் மழை அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, மே. 14

இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தென்படுகின்ற வளிமண்டலவியல் இடையூறு காரணமாக அடுத்துவரும் சில தினங்களுக்கு மழையுடனான வானிலை அதிகரித்துக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக சிரேஸ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

திருகோணமலை தொடக்கம் மட்டக்களப்பு, பொத்துவில் ஊடாக காலி வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20 - 30 கிலோமீற்றர் வேகத்தில் தென்மேற்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

காங்கேசன்துறை தொடக்கம் முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 40 - 45 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டை சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும்.

ஆனால் இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும்-என்றார்.

(அ)

# குளியாப்பிட்டிய இளைஞர் கொலை; சந்தேகத்தின் பேரில் காதலி கைது!

கொழும்பு, மே. 14

குளியாப்பிட்டிய பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது காதலி கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கு உதவியமை மற்றும் குற்றத்தை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 18 வயதுடைய வஸ்ஸாவுல்ல - இலுக்கின்ன பகுதியைச் சேர்ந்தவராவார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த இளைஞன் கடந்த 22ஆம் திகதி தனது காதலியைச் சந்திக்கச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

பின்னர் காணாமல்போன இளைஞனின் சடலம் சிலாபம் - மாதம்பே பிரதேசத்தில் மீட்கப்பட்டிருந்தது. அதேநேரம் சம்பவம் தொடர்பில் குளியாப்பிட்டிய வஸ்ஸாவுல்ல பகுதியைச் சேர்ந்த காதலியின் தந்தையான "சிங்கிதி" என அழைக்கப்படும் சுஜித் பெர்னாண்டோ மற்றும் அவரது மனைவி டிலானி ரசிகா ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மருந்துகள் பதிவு செய்தமையை உறுதிப்படுத்த விசேட ஸ்ரிக்கர்!

கொழும்பு, மே. 14

மருந்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு விசேட ஸ்ரிக்கர் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான கொள்வனவு கோரிக்கை அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர், விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம குறிப்பிட்டுள்ளார்.

மருந்துகளுக்காக போலி பதிவுச் சான்றிதழ்கள் முன்வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படும் சகல மருந்துகளுக்கும் விசேட ஸ்ரிக்கர் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக ஆனந்த விஜேவிக்ரம கூறினார்.

ஒரு மாதத்திற்குள் குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

(அ)

# சாரதிகளிடம் கத்தியை காண்பித்து அச்சுறுத்தி ஓட்டோக்கள் கொள்ளை!

கொழும்பு, மே. 14

வாடகைக்குச் செல்வதாகக் கூறி ஓட்டோக்களில் ஏறி சாரதிகளிடம் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தி முச்சக்கரவண்டிகள் மற்றும் சொத்துக்களை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸை மற்றும் மொறட்டுவை உள்ளிட்ட பல பகுதிகளில் இந்நபர் பல்வேறு குற்றச் செயல்களை அடிப்படையாக கொண்டு அங்குலானை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் வாடகைக்குச் செல்வதாகக் கூறி ஓட்டோக்களில் ஏறி சாரதிகளிடம் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தி 2 ஓட்டோக்கள், 2 கையடக்கத் தொலைபேசிகள், நகைகள் மற்றும் பணம் உள்ளிட்ட பொருட்களைக் கொள்ளையிட்டுள்ளதாகவும் மேலும் மொறட்டுவை பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பகுதிகளில் ஓட்டோ சாரதிகளைத் தாக்கி பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை கொள்ளையிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து இரண்டு ஓட்டோக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானாவின் ஒழுக்கக்கேடுகளை தொடர சில அமைச்சர்கள் முயற்சி

## ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 14

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேயினால் ஆரம்பிக்கப்பட்ட சட்டவிரோத மற்றும் ஒழுக்கக்கேடான வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் சில அமைச்சர்கள் ஒழுக்கக்கேட்டை ஊக்குவிக்கவும் ஒழுக்கத்தை சிதைக்கவும் தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேரர், டயானா கமகே நாட்டுக்கு எதுவும் செய்ததாக தெரியவில்லை என்று கூறினார்.

"கஞ்சாவை ஊக்குவிப்பது மற்றும் ஒழுக்கக்கேட்டை ஊக்குவிப்பது பற்றி அவர் குரல் எழுப்பியது மட்டுமே செய்யப்பட்டது" என்று அவர் கூறினார்.

நாட்டில் ஒழுக்கக்கேட்டை வளர்த்து, ஒழுக்கத்தை அழித்து, பொருளாதார வளர்ச்சி என்ற மாயையை காட்டி அவர் செய்ய முயன்ற சதிச் செயல் தற்போது நீதிமன்ற தீர்ப்பால் நின்றுவிட்டது. ஆனால் சில அமைச்சர்கள் அந்த வேலைத்திட்டங்களை தொடர விரும்புகிறார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நீதிமன்ற தீர்ப்பின்படி, டயானாவின் பங்கு நிராகரிக்கப்பட்டது. அந்த குணம் சமூக தலைமைக்கு சற்றும் பொருந்தாது. இறுதியாக, அவர் இலங்கையர் அல்லாததால், இந்த நாட்டில் அரசியலில் ஈடுபடுவதற்கு அவருக்கு உரிமை இல்லை எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, மே. 14

நிட்டம்புவ - திஹாரிய பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த நபரும் மேலும் நால்வரும் இணைந்து அப்பகுதியில் உள்ள மரண இல்லம் உள்ள வீதியில் மின் விளக்குகளைப் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளின்போது மின்விளக்குகளை பொருத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட வயர் வீதியில் இருந்த உயர் மின் கம்பியில் மோதியதில் குறித்த நபர், மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் திஹாரியா கலகெடிஹேன பிரதேசத்தை சேர்ந்த 40 வயதானவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் தாக்கிய ஏனைய நால்வரும் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ)

# வயலிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, மே. 14

கிரிஉல்ல பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் உள்ள வயலொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கிரிஉல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 50 முதல் 60 வயதுக்குட்பட்டவர் என்பதுடன் உயிரிழந்தவர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சடலம் அடையாளம் காணமுடியாதவாறு அழுகிய நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிஉல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கரட் துண்டு தொண்டையில் சிக்கி ஒன்றரை வயது குழந்தை மரணம்!

கொழும்பு, மே. 14

அநுராதபுரம் - சாலியவெவ பகுதியில் கரட் துண்டொன்று தொண்டையில் சிக்குண்டதில் ஒன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

சமைப்பதற்காக கரட்டை துண்டுகளாக வெட்டி மேசையொன்றின் மீது குறித்த குழந்தையின் தாய் வைத்துள்ளார்.

பின்னர் மேசையிலிருந்த கரட் துண்டொன்றை குறித்த குழந்தை உட்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த கரட் துண்டு குழந்தையின் தொண்டையில் சிக்குண்டதை அடுத்து நொச்சியாகம வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த குழந்தை மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது உயிரிழந்ததாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# இ.போ.ச சாரதிகள், நடத்துநர்கள் 1,000 பேருக்கு நிரந்தர நியமனம்!

கொழும்பு, மே. 14

இலங்கை போக்குவரத்து சபையில் பணியாற்றும் 1,000 சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து டிப்போக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தேவையான தகைமைகளைப் பெற்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு இவ்வாறான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# நல்லூரில் பசுமை இயக்கத்தின் அற்றார் அழிபசி தீர்த்தல் திட்டம்

யாழ்ப்பாணம், மே. 14

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் "அற்றார் அழிபசி தீர்த்தல்" என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ .ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நல்லூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான நிதி அனுசரணையைக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த செல்லையா



சத்தியலிங்கம் மற்றும் இலண்டன் வாழ் சற்குணநாதன் துஷ்ாகரன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.

கொரோனாப் பெருந் தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில் இழப்பைத் தொடர்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி பொருளாதார ரீதியாகப் பின் தங்கியுள்ள குடும்பங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடர்க் காலத்தில் ஆரம்பித்த அற்றார் அழிபசி தீர்த்தல் திட்டத்தை இன்றுவரை கைவிடாது தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நினைவேந்தலில் ஈடுபடும் தமிழரை துன்புறுத்தும் அரசு நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபடுவதாகக் கூறமுடியாது!

## பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 14

நினைவேந்தலில் ஈடுபடும் தமிழர்களை துன்புறுத்தும் அச்சுறுத்தும் கைதுசெய்யும் இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக தெரிவிக்க முடியாது என இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பான பேர்ள் தெரிவித்துள்ளது.

பேர்ள் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது-

திருகோணமலையில் நினைவேந்தலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழர்கள் மீதான தாக்குதலை பேர்ள் கண்டிக்கின்றது.

15 வருடங்களிற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தின் ஈவிரக்கமற்ற இனப்படுகொலையை தமிழர்கள் நினைவேந்தும் இந்த தருணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது காயங்களை ஆற்றுதல் கூட்டு நினைவேந்தலின் ஒரு பகுதியாக மாறியுள்ளது.

தங்கள் நேசத்திற்குரியவர்களை நினைவுகூரும் தமிழர்களை துன்புறுத்தும் அச்சுறுத்தும் கைதுசெய்யும்இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக தெரிவிக்க முடியாது.

கடந்த வருடம் வெசாக் தினத்தை முன்னிட்டு இலங்கை பொலிஸார் உள்ளூர் மக்களிற்கு பிஸ்கட்கள் போன்றவற்றை வழங்கியிருந்தனர் - திருகோணமலை சம்பவம் அவர்களின் போலிநாடகத்தை வெளிப்படுத்தியுள்ளது என்றுள்ளது. (அ)

சாதாரண தர வினாத்தாள் கசிவு;

# தனியார் வகுப்பு ஆசிரியரும் பாடசாலை ஆசிரியையும் கைது!

கொழும்பு, மே. 14

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் ஆங்கில மொழி வினாத்தாளின் சில பகுதிகளை மாணவர்கள் குழுவொன்றுக்கு வட்ஸப்பில் பகிர்ந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தனியார் வகுப்பு ஆண் ஆசிரியர் மற்றும் பெண் பாடசாலை ஆசிரியை ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹசலக்க பிரதேசத்தில் தனியார் பயிற்சி வகுப்புகளை நடத்தும் பயிற்சி ஆசிரியர் கண்டி கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பெண் ஆசிரியை கம்பஹா பிரதேசத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் ஆசிரியை தற்போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் பயிற்சி பெற்று வருவதாகவும், கம்பஹாவில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றின் பரீட்சை நிலையத்தில் பரீட்சைகளுக்கு பொறுப்பாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சி வழங்குவதைத் தடுக்கும் பொலிஸார் வெசாக் நிகழ்வை தடுத்து நிறுத்துவார்களா?

கொழும்பு, மே 14

**தொற்று நோய் அபாயத்தை காரணம் காட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கத் தடையேற்படுத்திய பொலிஸார், அதேபோன்று வெசாக் பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா? என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர், அருட்தந்தை மா. சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.**



நேற்றுத் திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

உப்பு கஞ்சி பகிர்வோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பித்திருக்கையில் சம்பூர் பொலிஸார் கஞ்சி பகிருதலை தடுப்பதற்காக மூதூர் நீதிமன்றத் தடை உத்தரவை பெற்றிருப்பதோடு நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் என இதுவரை நால்வரை கைது செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. மக்கள் ஒன்று கூடுதல் மூலம் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது எனவும் காரணம் காட்டியுள்ளனர்.

இது கொரோனா காலத்தில் பயன்படுத்திய சொற் தொடராகும். அதனையே மீண்டும் நினைவேந்தலை தடுத்து நிறுத்தும் ஆயுதமாக கையில் எடுத்திருப்பதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுப்பதும் இறந்தவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் அடிப்படை உரிமையை மறுக்கும் செயலாகும்.

சம்பூர் பொலிஸார் இத்தகைய அராஜக செயலை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு எதிர்வரும் வெசாக் பண்டிகையின் போது அதே தொற்று நோய் அபாயத்தை காரணம் காட்டி வெசாக் பண்டிகை நிகழ்வுகளையும் தடுத்து நிறுத்துவார்களா? எனவும் கேட்கின்றது.

பேரினவாத சிறீ லங்கா அரசு சர்வதேச சக்திகள் பேராதரவோடு 2009 இல் இனப்படு கொலையை அரங்கேற்றிக் கொண்டிருக்கையில் ஆண்கள், பெண்கள் எனப் பெரியோர் முதல் சிறுவர் வரை சதை பிண்டங்களாக இரத்த வெள்ளத்திலும் கொல்லப்பட்டும் காயங்களோடும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் இன்னும் ஒரு பக்கம் மக்கள் பட்டினியோடு வெறும் உப்பு கஞ்சிக்காக நீண்ட வரிசையில் மக்கள் காத்துக் கிடந்த பேரவலத்தை தமிழர் வரலாற்றில் மறக்க முடியாது.

இவ் வரலாற்று பேரவலத்தினை நினைவு கூரவும் அநியாயமாக கொல்லப்பட்டவர்களுக்கு, காணாமலாக்கப் பட்டவர்களுக்கு நீதி கேட்கவும் கடந்த 15 வருட காலமாக தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் கஞ்சி பகிர்வதோடு மே 18 ஆம் திகதி நினைவேந்தல் நடத்தப்படுகின்றது.

உப்பு கஞ்சி மக்களின் நீதிக்கான குரலின் அடையாளமும், ஆயுதமும் ஆகும். எனவே சம்பூர் பொலிஸார் பெற்றிருக்கும் நீதிமன்ற தடையுத்தரவை மீளப்பெற வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்தோடு, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி பகிர்வு காரணமாக இதுவரை கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட உதவிச் செயலாளர் ஹரிஹர குமார், பாடசாலை மாணவி உட்பட பெண் சமூகச் செயல்பாட்டாளர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இத்தகைய கைதுகள் மூலம் நீதியைத் தடுத்து விட முடியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றோம் என்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஏ - 9 வீதியில் விபத்து இரு இளைஞர்கள் பலி

மடாட்டுகம, மே 14

மடாட்டுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை மற்றும் ஹதரலியத்த பிரதேசங்களைச் சேர்ந்த 28 மற்றும் 31 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

கெக்கிராவையிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த லொறியின் பின்புறத்தில் பயணித்த பேருந்து குறித்த லொறியை கடந்து முன்னோக்கிச் செல்வதற்கு முயன்ற போது எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி பின்னர் லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர் காயமடைந்த நிலையில் தம்புள்ளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## 10 கோடி ரூபாய் பெறுமதியான திமிங்கல வாந்தியுடன் ஐவர் கைது

கற்பிட்டி, மே 14

கற்பிட்டி கண்டக்குளி பிரதேசத்திலுள்ள வீடொன்றின் பின்புறத்தில் புதைக்கப்பட்டிருந்த 10 கோடி ரூபாய் பெறுமதியான திமிங்கல வாந்தியுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனாத்தவில்லு பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த திமிங்கல வாந்தியானது கடலில் மிதந்து கொண்டிருந்த நிலையில் கண்டக்குளி மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் படகின் மூலம் இரகசியமாக எடுத்து வரப்பட்டு விற்பனை செய்வதற்காகப் பாதுகாப்பாகப் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த திமிங்கில வாந்தியானது 35 கிலோ நிறையுடையது எனவும் இதன் மதிப்பு 10 கோடி ரூபாய் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## வான், விண்வெளி சக்தி மாநாட்டில் விமானப்படைத் தளபதி பங்கேற்பு



சிட்டி, மே 14

இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ அவுஸ்திரேலியாவில் நடந்த 2024 ஆம் ஆண்டுக்கான வான் மற்றும் விண்வெளி சக்தி மாநாட்டில் கலந்துகொண்டார்.

தேசிய வான் மற்றும் விண்வெளி சக்தியை தயார்படுத்தல் மற்றும் மீள்திறனை உருவாக்குதல் எனும் கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெற்றது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உயர்மட்ட பாதுகாப்புத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இராணுவப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வின்போது எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ பல முக்கிய பிரமுகர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதேவேளை விமானப்படைத் தளபதி அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வராவைச் சந்தித்தார்.

அங்கு அவர்கள் கடல்சார் கள விழிப்புணர்வு தொடர்பான கூட்டு முயற்சிகள் மற்றும் அவுஸ்திரேலிய இராணுவத்துடன் கூட்டுப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை பற்றி கலந்துரையாடினர்.

மேலும், உதேனி ராஜபக்ஷ இரு நாட்டு விமானப் படைகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக றோயல் அவுஸ்திரேலிய விமானப் படையின் தளபதி எயார் மார்ஷல் ராபர்ட் சிப்மேனை சந்தித்தார். (எ)

# தென்கிழக்கு பல்கலையில் ஊழியர்கள் போராட்டம்

கொழும்பு, மே 14

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் நேற்று உக்கிரமடைந்த நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழக முற்றலில் பாரிய பேரணியும் போராட்டமும் இடம்பெற்றது.



தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க தலைவர் எம்.ரி.எம். தாஜுடீனின் தலைமையிலும் ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகமது காமிலின் வழிகாட்டலிலும் இடம்பெற்ற குறித்தபோராட்டத்தில் பெரும் அளவிலான ஊழியர்கள் கலந்து கொண்டு ஆக்ரோஷமான கோஷங்களை முன் வைத்தனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்பார்க்கும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அதற்காக நீண்டகாலமாக போராடிவரும் நிலையில் அவர்களது போராட்டம் தற்போது தொடர்போராட்டமாக உருவெடுத்துள்ளது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஊழியர் சங்கத் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்: நாங்கள் சொகுசு தேவைகளுக்காக போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். இன்றைய பொருளாதார நிலைமையின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வை கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தின் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளது. அப்பட்டமான உண்மை என்றும் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக கட்டமைப்பில் பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்விசாரா ஊழியர்களின் பங்கு என்பது பிரதானமான ஒன்று. இவ்வாறான சூழலில் மாணவர்கள் கூட கருத்து எதனையும் கூறவில்லை.

பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காது இருப்பதனூடாக அரசுக்கு அழுத்தங்களை கொடுக்க மாணவர்களும் முன்வர வேண்டும் என்றும் இங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

நாங்களும் பல்கலைக்கழக செயல்பாட்டுக்கு பங்களிப்பவர்கள் என்பதை குறித்த தரப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும். அத்துடன் எங்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசுக்கு அனைவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இங்கு ஒற்றுமையே பலம், சமத்துவமே எம் தேவை, அரசாங்கமே கண்முளித்துப்பார், 8 வருட ஏமாற்றம் இன்னும் தொடருமா?, வேண்டாம் வேண்டாம் பாகுபாடு வேண்டாம், புத்திஜீவிகளை உருவாக்கும் அரச ஊழியர்களாகிய நாங்கள் நடுத்தெருவில் என்பனபோன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் வாதிகளே ஏன் இன்னும் மௌனம்?

## கல்முனையில் தொடரும் போராட்டம்

கல்முனை, மே 14

தமிழ் அரசியல் வாதிகளே ஏன் இன்னும் மௌனம்? என்று கேள்வியெழுப்பிய கல்முனை வடக்கு மக்கள், பிரதேச செயலகத்துக்கு எதிரான அடக்குமுறைகளையும் அத்து மீறல்களையும் கண்டித்து பிரதேச செயலகத்தின் முன் இடம்பெற்றுவரும் போராட்டத்தின் 50 ஆவது நாளை முன் னிட்டு மாபெரும் போராட்ட ஊர்வலத்தை முன்னெடுத்தனர்.



கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக உரிமைக்கான போராட்டம் பிரதேச செயலகத்தின் முன்னால் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பித்தது.

இந்த நிலையில் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு போராட்ட இடத்தில் ஆயிரக் கணக்காண பொதுமக்கள் ஒன்று திரண்டு தமிழ் அரசியல் வாதிகளே ஏன் இன்னும் மௌனம், ஒரு அரசியல்வாதியை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக 40 ஆயிரம் பொதுமக்களை துன்புறுத்துவது நியாயமா?, பிரதேச செயலகத்துக்கு மலசல கூடம் திருத்துவதற்குக் கூட நிதி வழங்கப்படுவதில்லை, பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகமாக மாற்றுவதை உடன் நிறுத்து, அரசியல் வாதிகளின் சூழ்ச்சிகளில் அகப்பட வேண்டாம், அபிவிருத்தித் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. எமது வளங்கள் அந்நியர்களால் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றது.

அரச நிதிப் பங்கீட்டில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றோம். எமது பிரதேச செயலகம் எமக்கு வேண்டும் போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு கறுப்புக் கொடிகள், உருவ பொம்மைகளை தாங்கியவா்று கோஷங்கள் எழுப்பினர்.

இதேவேளை கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதி ஊடாக கல்முனை தரவை சிறீ சித்தி விநாயகர் பிள்ளையார் கோவில் வரை சென்று அங்கிருந்து மீண்டும் கல்முனை நகரை வந்தடைந்து அதனூடாக பிரதேச செயலகத்தை வந்தடைந்து ஒரு மணிவரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (எ)



## கிண்ணியாவில் ட்ரோன் மூலம் பயிர்களுக்கு கிருமிநாசினி தெளிப்பு

கிண்ணியா, மே 14

கிண்ணியா விவசாயிகள் முதன் முறையாக ட்ரோன் தொழில்நுட்ப சாதனத்தின் மூலம் நெற்பயிர்களுக்கு கிருமிநாசினியை தெளித்துள்ளனர்.

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பீங்கான் உடைந்தாரு, வன்னியனார் மடு விவசாய நிலத்தில் கிருமிநாசினியை விசிறியுள்ளனர்.

ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முதன் முறையாக பயிர்களுக்கு கிருமிநாசினி தெளித்ததன் மூலம் புதிய அனுபவம், பயிற்சிகளை பெற்றதாகவும் அப்பகுதி விவசாய சம்மேளன ஊடகப் பேச்சாளர் எம். எம். மஹ்தி தெரிவித்தார்.

பல ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கையின்போது சிறந்த அறுவடையை பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது இதுவே முதன் முறையாகும் எனவும் அவர் கூறினார். (எ)

## டிஜிற்றல் ஓவியப்போட்டியில் மூதூர் மாணவன் 3 ஆம் இடம்



மூதூர், மே 14

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு தெற்காசிய நாடுகளுக்கு இடையில் நடத்தப்பட்ட 12 வயதுக்குட்பட்ட பிரிவில் மூதூரைச் சேர்ந்த மாணவன் நபீஸ் முகமட் ஸமீல் Health For All என்ற தலைப்பின் கீழான டிஜிற்றல் ஓவியப் (Digital Art) போட்டியில் தென்னாசிய நாடுகளில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

திருகோணமலை மூதூர் அல் - ஹிலால் மத்திய கல்லூரியைச் சேர்ந்த இவர் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் முதலிடம் - பங்களா தேஷ், இரண்டாம் இடம் - இந்தியா மூன்றாம் இடம் - இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# சம்பள பிரச்னைக்கு அமைச்சரவை தீர்வு வழங்காவிடின் இலங்கை பல்கலைகள் சர்வதேச ரீதியாக பாதிக்கப்படும்







மட்டக்களப்பு, மே 14

சம்பள பிரச்னைக்கு அமைச்சரவை உரிய தீர்வு வழங்காவிடின் இலங்கை பல்கலைக்கழகங்கள் சர்வதேச ரீதியாகப் பாதிக்கப்படும் என்று கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அமைச்சரவை கூட்டத்தில் பல்கலைக்கழக ஊழியர்களின் 107 வீத சம்பள அதிகரிப்பு மற்றும் மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவு அதிகரிப்பு குறித்த இரண்டு பத்திரங்களும் அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்படாவிடில் இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழக நடவடிக்கைகளில் ஏற்படும் செயலிழப்பின் முழுப் பொறுப்பையும் அரசாங்கமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஏற்க வேண்டும் என்றும் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் வலியுறுத்தினர்.

இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள் 12 நாட்களாக முன்னெடுக்கும் தொடர் பணிப் பகிஷ்கரிப்பின் ஓர் அங்கமாக, கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்க வெளிவாரி கற்கைகள் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் ஏ. ஜெகராஜு கருத்து தெரிவிக்கையில், அமைச்சரவை கூட்டமானது பல்கலைக்கழக ஊழியர்களுக்கு மாத்திரமன்றி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், கடந்த 11 நாட்களாக பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மட்டுமல்லாது ஆராய்ச்சி, ஆய்வுகூட செயல்பாடுகள், மருத்துவப் பரிசோதனைகளும் தடைப்பட்டுள்ளன. பரீட்சைகள், சர்வதேச மாநாடுகள் மற்றும் முக்கிய கூட்டங்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி நடவடிக்கைகள் தாமதமாகுவதால் இலங்கை பல்கலைக்கழகங்கள், சர்வதேச [illegible] மருத்துவ பரிசோதனைகள் தடைப்படுவதால் நோயாளிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதன் காரணமாக அரச பல்கலைக்கழக கட்டமைப்பு சீர்குலைந்து இலங்கையில் கல்வி பயிலும் சர்வதேச மாணவர்கள் மத்தியில் இங்குள்ள பல்கலைக்கழகங்கள் குறித்து விமர்சனங்கள் உருவாக வாய்ப்பாக அமையும். இது வெளிநாட்டு மாணவர்கள் இலங்கை பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும்.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளக் கோரிக்கையை அமைச்சரவை உபகுழு ஊடாக கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு தீர்வு வழங்குவதாக அரசாங்கமும், அமைச்சரும், உரிய திணைக்களங்களும் பாராளுமன்றத்திலும் நிர்வாக ரீதியிலும் கருத்து தெரிவித்தபோதும் அதற்கான எழுத்துமூல உடன்பாடுகளை இதுவரை வெளியிடாமல் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கி வருகின்றனர். இது பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வல்ல.

சம்பள திருத்தம் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோதும் அவற்றை பரிசீலிக்க போதிய பணமில்லை எனக் கூறும் அரசாங்கம் சில தரப்புக்கு சம்பள மற்றும் கொடுப்பனவு உயர்வுகளைச் செய்ய எங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டது என்ற கேள்வி எழுகின்றது.

பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள உயர்வு கோரிக்கையானது புதிய கோரிக்கையல்ல. இது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, நிதியமைச்சு, திறைசேரி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் என்பனவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கடந்த 8 வருடங்களாக இழுத்தடிப்புச் செய்யப்பட்டுவரும் பிரச்னையாகும் - என்றார். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாகிஸ்தான் அரசுக்கு எதிரான

# போராட்டத்தில் வன்முறை கலவரபூமியானது காஷ்மீர்

இஸ்லாமாபாத், மே 14

**பாகிஸ்தானில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து அரசாங்கத்துக்கு எதிராகப் பெரும் போராட்டம் வெடித்தது. அத்தோடு போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதால் பெரும் வன்முறை முண்டது.**



பாகிஸ்தானில் கடந்த சில மாதங்களாக கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால் பணவீக்கம் ஏற்பட்டு கோதுமை, எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் விலை உயர்வைக் கண்டித்து அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

தகவலறிந்த பொலிஸார் அங்கு விரைந்து சென்று போராட்டத்தை கைவிடும்படி வலியுறுத்தினர். அப்போது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் பொதுமக்கள் தாக்கியதால் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியானார். மேலும் 78 பொலிஸார் உள்பட 100 பேர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி போராட்டக்காரர்களை பொலிஸார் கலைத்தனர். பின்னர் போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பகுதியில் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டன. மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்தப் பகுதியில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைச் சமாளிப்பது தொடர்பான அவசர கூட்டத்துக்கு ஜனாதிபதி ஆசிப் ஆலி சர்தாரி அழைப்பு விடுத்துள்ளார். (எ)



# திடீர் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இந்தோனேஷியாவில் 50 பேர் பலி!

ஜகார்த்தா, மே 14

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 50 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. இதனால் ஆறுகளில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேலும், பல பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டது. வெள்ளப் பெருக்குடன் எரிமலை சாம்பல் லாவாவும் பரவியது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டனர்.

இந்நிலையில், கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் பலர் வீடுகளை இழந்தனர். வீதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த இயற்கை இடர்களில் சிக்கி இதுவரை 50 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். மீட்புப்பணியில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ)



# காஸாவில் மருத்துவமனையை உருவாக்குகிறது இஸ்ரேல் அரசு

காஸா, மே 14

காஸாவின் மையப்பகுதியான டெய்ர் அல் - பலாஹ் நகரில் இஸ்ரேல் ஒரு மருத்துவமனையை உருவாக்கி வருகிறது.

இதேவேளை, காஸாவின் ரபா நகரில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரையும் வெளியேறுமாறு இஸ்ரேல் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அத்தோடு தனது இராணுவத்தை களமிறக்கிய இஸ்ரேல் அங்கு தற்போது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் ரபா நகரிலிருந்து வெளியேறும் பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக மருத்துவமனை அமைக்கப்படுகிறது. காஸா மீது போர் தொடங்கிய பின்னர் இஸ்ரேலால் உருவாக்கப்படும் 8 ஆவது மருத்துவமனை இதுவாகும். (எ)

# கொரிய தீபகற்பத்தில் வடகொரியா மீண்டும் நவீன ஏவுகணை சோதனை

பியாங்க்யாங், மே 14



கொரிய தீபகற்பத்தில் தொடர் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகளால் வடகொரியா பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே நீண்ட தூர ஏவுகணை சோதனை நடத்த வடகொரியாவுக்கு ஐ. நா. தடை விதித்துள்ளது. இதனைப் பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து பல ஏவு கணை சோதனைகளை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் பியாங்க்யாங்கிலுள்ள இராணுவத் தளத்துக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது புதிய மல்டிபிள் ரொக்கெட் ஏவுகணை சோதனையை வடகொரிய இராணுவம் நடத்தியது. வடகொரியாவின் இந்த சோதனை தங்களது நாட்டை குறிவைத்து தாக்குதல் நடத்தும் வகையில் அமைந்திருப்பதாக தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

# மத்தியில் பா. ஜ. க. ஆட்சி அமைத்தால் ஸ்டாலின், மம்தா கைது செய்யப்படுவர்

## கெஜ்ரிவால் எச்சரிக்கை



டில்லி, மே 14

மத்தியில் பா. ஜ. க. ஆட்சி அமைத்தால் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோர் கைது செய்யப்படுவர் என்று டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எச்சரித்துள்ளார்.

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் கடந்த மார்ச் 21 ஆம் திகதி கெஜ்ரிவாலை சட்ட அமுலாக்கத் துறை கைது செய்தது. உச்ச நீதிமன்றம் இடைக்கால பிணை வழங்கியதால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அவர் டில்லி திஹார் சிறையிலிருந்து வெளியே வந்தார். முதல்வர் அலுவலகத்துக்கு செல்லக்கூடாது, தேர்தல் பிரசாரத்தில் மட்டுமே அவர் ஈடுபடலாம் என்று உச்ச நீதிமன்றம் நிபந்தனை விதித்துள்ளது.

இந்தச் சூழலில் முதல்வர் கெஜ்ரிவால் டில்லியிலுள்ள அனுமன் கோவிலில் வழிபாடு நடத்தினார். பின்னர் ஆம் ஆத்மி தலைமை அலுவலகத்துக்கு சென்ற அவர், தொண்டர்கள் மத்தியில் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எதிர்காலத்தில் பா. ஜ. கவுக்குப் போட்டியாக ஆம் ஆத்மி உருவெடுக்கும் என்பதை உணர்ந்து எங்கள் கட்சியை அழிக்க பிரதமர் நரேந்திர மோடி அதிதீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். கட்சியின் மூத்த தலைவர்கள் மணீஷ் சிசோடியா, சத்யேந்தர் ஜெயின், சஞ்சய் சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். என்னையும் சிறையில் அடைத்தனர்.

எங்களைக் கைது செய்து, சிறையில் தள்ளியதன் மூலம் ஆம் ஆத்மியை அழித்துவிடலாம் என்று பா. ஜ. க. பகல் கனவு காண்கிறது. ஆம் ஆத்மி என்பது கொள்கை, கோட்பாடு கொண்ட கட்சியாகும். அதனை யாராலும் அழிக்க முடியாது. நாங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைவோம். எனவே, பா. ஜ. கவின் சர்வாதிகார பிடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுங்கள் என்று பொதுமக்களிடம் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (எ)

# காஸாவில் மனிதாபிமான போர் நிறுத்தம் அவசியம்

## ஐ. நா. பொதுச் செயலாளர் வலியுறுத்தல்



குவைத், மே 14

காஸாவில் மனிதாபிமான போர் நிறுத்தம் உடனடியாகத் தேவை என்று ஐ. நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேரஸ் வலியுறுத்தியுள்ளார்.

காஸாவிலுள்ள ஹமாஸ் அமைப்பினர் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக காஸா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. 7 மாதங்களைத் தாண்டியும் இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் குவைத்தில் நடந்த சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய ஐ. நா. பொதுச் செயலாளர் தெரிவித்தவை வருமாறு, காஸாவில் உடனடியாக மனிதாபிமான போர் நிறுத்தம் காலத்தின் தேவை. அனைத்து பணயக்கைதிகளையும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும். மனிதாபிமான உதவிகளில் உடனடி எழுச்சிக்கான எனது அழைப்பு மற்றும் உலகின் அழைப்பை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். போர் நிறுத்தம் ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும். இந்தப் போரின் பேரழிவுகள் மற்றும் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு நீண்ட காலங்கள் தேவைப்படும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர். சி. பி. அசத்தல் வெற்றி மீண்டும் சொதப்பியது டில்லி



பெங்களூரு, மே 14

நடப்பு ஐ. பி. எல். சீசனின் 62 ஆவது லீக் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணி வெற்றி பெற்றது.


பெங்களூருவிலுள்ள சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர். சி. பி. அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 187 ஓட்டங்கள் எடுத்தது. ரஜத் பட்டிதார் 52, வில் ஜேக்ஸ் 41, கேமரூன் கிரீன் 32, விராட் கோலி 27 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்த நிலையில் 188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டில்லி அணி விரட்டியது.

அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டேவிட் வோர்னர் மற்றும் ஜேக் ஃப்ரேசர் மெக்குர்க் களம் கண்டனர். முதல் ஓவரில் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் வோர்னர் ஆட்டமிழந்தார். மூன்றாவது ஓவரில் அபிஷேக் போரல் மற்றும் ஜேக் ஃப்ரேசர் மெக்குர்க் ஆட்டமிழந்தனர். அடுத்த ஓவரில் குமார் குஷக்ரா வெளியேறினார்.

10 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 87 ஓட்டங்கள் எடுத்தது டில்லி அணி. அதன் பிறகு சீரான இடைவெளியில் டில்லி வீரர்கள் விக்கெட்டை இழந்தனர். அணித் தலைவர் அக்சர் படேல் 39 பந்துகளில் 57 ஓட்டங்கள் எடுத்தார். இந்த நிலையில் 19. 1 ஓவர்களில் 140 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்த டில்லி அணி தோல்வியடைந்தது. இதன் மூலம் 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது ஆர். சி. பி. அந்த அணியின் பந்துவீச்சாளர் யஷ் தயாள் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

நடப்பு சீசனில் இறுதியாக விளையாடிய 5 போட்டிகளில் ஆர். சி. பி. அணி வெற்றி பெற்று அசத்தியுள்ளது. இதற்கு முன்னர் 2009 மற்றும் 2016 சீசனில் தொடர்ச்சியாக 5 போட்டிகளில் வென்றுள்ளது ஆர். சி. பி. 2011 சீசனில் தொடர்ச்சியாக 7 போட்டிகளில் வென்றுள்ளது. இந்தத் தொடர் வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் 5 ஆம் இடத்துக்கு ஆர். சி. பி. முன்னேறியுள்ளது. இதுவரை 13 போட்டிகளில் விளையாடி 6 வெற்றிகளுடன் 12 புள்ளிகளை ஆர். சி. பி. அணி பெற்றுள்ளது. (எ)



## சி. எஸ். கே. கொண்டாட்டம்

சென்னை, மே 14

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் சேப்பாக்கத்தில் நடந்த போட்டியில் சி. எஸ். கே. அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வீழ்த்தியது. சேப்பாக்கம் மைதானத்தில் சி. எஸ். கேவின் 50 ஆவது வெற்றியாக இது அமைந்தது. இந்த மைதானத்தில் 71 போட்டிகளில் விளையாடியுள்ள சென்னை அணி 50 வெற்றிகளையும் 21 தோல்விகளையும் பதிவு செய்துள்ளது. 50 ஆவது வெற்றியைப் பதிவு செய்த சி. எஸ். கே. வீரர்களுக்கு அணி நிர்வாகம் விருது வழங்கிக் கௌரவித்தது.

இந்நிலையில் நடப்பு ஐ.பி.எல். சீசனில் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் கடைசி லீக் போட்டியில் சி. எஸ். கே. அணி நேற்று முன்தினம் விளையாடியது. இந்த ஆட்டம் முடிவடைந்ததும் எம். எஸ். டோனி உள்ளிட்ட சி. எஸ். கே. வீரர்கள் மைதானத்தை வலம் வந்து இரசிகர்களின் இருப்பிடத்தை நோக்கிப் பந்துகள், ரீ - ஷேர்ட்களை தூக்கி வீசினர். (எ)

## தங்கம் வென்ற காலிங்க




டோக்கியோ, மே 14

11 ஆவது கினாமி மிஷிடகா நினைவு தடகளப் போட்டி ஜப்பானில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆடவருக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையின் காலிங்க குமாரகே தங்கப் பதக்கம் வென்றார்.

போட்டியை நிறைவு செய்ய காலிங்க குமாரகே 45. 92 வினாடிகளை எடுத்துள்ளார்.

இதேவேளை, பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட நதிஷா ராமநாயக்க நான்காவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அவர் போட்டியை முடிக்க எடுத்துக்கொண்ட நேரம் 54. 02 வினாடிகள் ஆகும். (எ)

## ரிஸ்வான், பகர் ஜமான் அபாரம்: பாகிஸ்தான் பழி தீர்த்து வெற்றி



டப்ளின், மே 14

டப்ளினில் நடந்த இரண்டாவது ரி - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி அயர்லாந்து அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 3 போட்டிகள் கொண்ட தொடரில் 1 - 1 என்ற சமநிலையை எட்டியது. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. இந்நிலையில் துடுப்பெடுத்தாடிய அயர் லாந்து 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 193 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ் தான் 3 விக்கெட்களை மட்டுமே இழந்து 16. 5 ஓவர்களில் 195 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்றது.

முகமது ரிஸ்வான் 46 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 75 ஓட்டங்களையும் பகர் ஜமான் 40 பந்துக ளில் 6 பௌண்ட்ரிகள் 6 சிக்ஸர்களுடன் 78 ஓட்டங்களையும் அஸாம் கான் 10 பந்துகளில் ஒரு பௌண்ட்ரி 4 சிக்ஸர்க ளுடன் 30 ஓட்டங்கள் விளாச 16. 5 ஓவர் களில் அயர்லாந்தின் கதை முடிந்தது.

ரிஸ்வானும் பகர் ஜமானும் 78 பந்துக ளில் 140 ஓட்டங்கள் குவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## தேசியமட்ட உதைபந்தாட்ட போட்டியில் சம்பியனானது மகாஜன மகளிர் அணி



யாழ்ப்பாணம், மே 14

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் 12 வயது மகளிர் அணிகளுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் மகாஜன அணி சம்பியனானது.

இந்தப் போட்டி கொழும்பு குதிரைப் பந்தைய விளையா[illegible] நடைபெற்றது.

[illegible] மகளிர் கல்லூரி அணியை எதிர்கொண்ட மகாஜன அணி 2 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

முதலாவது பாதியாட்டத்தில் 1: 0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்த மகாஜன, இரண்டாவது பாதியாட்டத்தில் மேலும் ஒரு கோலைப் பெற்று வெற்றியை உறுதி செய்தது. யாழினி ஒரு கோலையும் கேதாரணி ஒரு கோலையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். இதுதான் முள்ளிவாய்க்காலில் எமது மக்களுக்குக் கஞ்சி வழங்கிய சிரட்டை.குடிப்பதற்கு ஒரு உபகரணம் இருக்கவில்லை.

கஞ்சி காய்ச்சுவதற்கு அரிசி இல்லை. உப்பில்லை தண்ணீர் கூட எடுக்க முடியாத நிலைமை. இவ்வாறான நிலைமையில் வெறும் உப்பில்லாத கஞ்சியைக் காய்ச்சி இந்த சிரட்டையில் தான் அந்த மக்கள்,குழந்தைகள் குடித்து உயிர் தப்பினார்கள்.

அதனால் முள்ளிவாய்க்கால் அடையாளமாக இந்த சிரட்டையைச் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். தயவு செய்து பாராளுமன்றத்தின் நூதனசாலையில் இந்த சிரட்டையை வையுங்கள்- என்றார். (அ)

## விஜயதாசவின்...

கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

மைத்திரி பதவி விலகியதன் பின்னர் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச கட்சியின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதோடு, கட்சியின் பதில் பொதுச் செயலாளராக சட்டத்தரணி கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையின் கீழுள்ள சுதந்திரக் கட்சியினர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளதாக அக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச சூட்சுமமாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கையர்களை...

ரஷ்யாவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாக குறிப்பிட்டு ஓய்வு பெற்ற இராணுவத்தினரை ரஷ்ய இராணுவத்தில் இணைக்கும் மோசடிகள் தற்போது தீவிரமடைந்துள்ளன.

ரஷ்ய யுத்தக்களத்தில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு அழுது புலம்புகிறார்கள். யுத்தக் களத்துக்கு செல்வதை தாங்கள் அறியவில்லை என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ரஷ்ய யுத்தக் களத்தில் காயமடைந்துள்ள இலங்கையர்களுக்கு முறையான சிகிச்சை வழங்கப்படுவதில்லை. 14 நாட்களாக ஒரே ஆடையுடன் அவர்கள் யுத்தக் களத்தில் இருப்பதாக அறிய முடிகிறது.

ஓய்வு பெற்ற இராணுவத்தினர் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் இலங்கைக்கான ரஷ்யத் தூதரகத்துடன் தொடர்புகளை மேற்கொண்ட போது, இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் சென்றுள்ளார்கள். ஆகவே எமக்குத் தலையிட முடியாது என்று தூதரகம் குறிப்பிடுகிறது.இவ்விவகாரத்தை மனிதாபிமான முறையில் ஆராய வேண்டும்.

தனக்கு அதிகாரம் கிடைத்தால் இலங்கையர்களை ஒரு நாள் அல்லது ஒரு வாரத்துக்குள் அழைத்து வருவதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மோசடியின் பின்னணியில் அவர் உள்ளாரா? என்ற சந்தேகம் எழுகிறது. 600 இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ரஷ்ய யுத்தக் களத்தில் இதுவரை 74 இலங்கையர்கள் உயிரிழந்ததுடன், சுமார் 50 இலங்கையர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான யுத்தம் தற்போது தீவிரமடைந்துள்ளது.ஆகவே இந்த நாடுகளின் யுத்தக் களத்துக்கும் இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் அனுப்பி வைக்கப்படலாம்.

ஆகவே ரஷ்ய விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் தெரிவுக்குழுவை அமைத்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்- என்றார். (எ)

## பொருளாதார...

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன் போது இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்பாக இன்றைய கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் பொருளாதார சீர்திருத்த திட்டங்களுக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பேஸ்புக்...

முன்னெடுத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது ரஷ்ய யுத்தக் களத்தில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

ரஷ்ய யுத்தக் களத்துக்குச் சென்றுள்ள இலங்கையர்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட ஒருசில விடயங்களை திருத்திக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, காமினி வலேபொட ஆகியோரை ஜனாதிபதி அழைத்திருந்தார். இவ்விருவரும் பங்குப்பற்றியிருந்தார்கள்.

ரஷ்யாவுக்கு தொழில் வாய்ப்புக்களுக்காக சென்று யுத்த களத்தில் விடப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் இவ்விருவரும் பல விடயங்களை பாதுகாப்புச் சபை கூட்டத்தில் முன்வைத்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுத்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி, பாதுகாப்பு தரப்பினருக்குப் பணிப்புரை விடுத்தார்.இதற்கமை ஒரிருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வளவு ஆலோசனைகள் வழங்கினாலும் முகப் புத்தகத்தில் (பேஸ்புக்) வெளியாகும் போலியான விளம்பரங்களுக்கு ஏமாறும் ஒரு தரப்பினர் உள்ளனர்.

ரஷ்யாவின் சென் பீற்றர் நகரத்தில் காணி வழங்கப்படுவதாகவும், குடும்பத்தாருக்கு வீசா மற்றும் 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படுவதாகவும் முகப்புத்தகத்தில் விளம்பரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

போலியான வாக்குறுதிகளை நம்பி இலங்கையர்கள் ரஷ்யாவுக்கு சென்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். ஆகவே போலியான விளம்பரங்களுக்கு ஏமாற வேண்டாம் என்று நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

ரஷ்யாவுக்கு இலங்கையர்களை அனுப்பும் மனிதக் கடத்தல் மோசடியில் ஓய்வுப் பெற்ற இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். ரஷ்ய யுத்தக் களத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மிகுதியாக உள்ளவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.- என்றார். (எ)

# உள்ளூராட்சி தேர்தல்தான் முதலில் நடைபெறவேண்டும்!

### கூறுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, மே. 14

தேர்தலை நடத்தாமால் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் தெரிவித்தார்.

இது குறித்து தயாசிறி ஜயசேகர தெரிவித்திருந்ததாவது-

ஜனாதிபதியின் செயலாளரினால் ஏப்ரல் 29 அன்று ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் சமுதாயக் குழுக்களை நடைமுறைப்படுத்தும் வகையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கும் வகையில் சமுதாய ஆலோசனைக்குழவை நியமிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதனூடாக பாரிய தவறு இழைக்கப்படுகின்றது. மூடப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு மீண்டும் அதிகாரம் வழங்கப்படும் வகையில் உள்ளது. ஆனால் எதிர்த்தரப்பினரின் தலையீடு இல்லாமல் போகின்றது.இவற்றுக்கு மத்தியில் தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

இது ஒரு திட்டமிட்ட செயலாகவே தெரிகின்றது. எனவே முதலில் உடனடியாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறவேண்டும்-என்றார். (அ)

# நாட்டில் தற்போது இரு ஜனாதிபதிகள்!

### லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, மே. 14

“நாட்டில் தற்போது இரண்டு ஜனாதிபதிகள் பதவியில் உள்ளதாகவே தெரிகின்றது” என எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் தற்போது இரண்டு ஜனாதிபதிகள் பதவியில் உள்ளதாகவே தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒருபுறம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்கின்றார். மறுபுறம் முன்னான் ஜனாதிபதி மஹிந்த அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்.

நாம் இது தொடர்பாக சிந்தித்தே பல விடயங்களை வினவுகின்றோம். தனியார் மயமாக்கல் மறுசீரமைப்பு போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதனை புதிய அரசாங்கம் இடைநிறுத்த வேண்டும் என மஹிந்த கோரியிருந்தார். அந்த பணிகள் புதிய அரசாங்கத்தினாலேயே முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் மின்சார சபை மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமா அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆலோசனையின் பிரகாரம் அவை கைவிடப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது-என்றார். (அ)

## மின்சார...

தெரிவித்துள்ளதாவது”

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அபிவிருத்தி பணிகள் தொடர்பான நடவடிக்கைகளை நிறுத்துமாறு கூறவில்லை.

நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கையினையே இடைநிறுத்துமாறு கூறினார்.

மின்சார சபை மறுசீரமைப்பு பணிகள் தொடர்ந்தம் முன்னெடுக்கப்படும்.

எவ்வாறாயினும், மின்சார சபையினை தனியாருக்கு விற்பனை செய்யும் எண்ணம் இல்லை-என்றார். (அ)

## அமெ.இராஜாங்க...

வதையுமே பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

அதன்படி வெள்ளிக்கிழமை இந்தியாவை சென்றடைந்திருந்த இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ, தென்னிந்தியாவுடனான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் சென்னையில் கொன்சியூலர் அதிகாரியுடன் சந்திப்பை முன்னெடுத்திருந்தார்.

இதனையடுத்து நேற்று காலை இலங்கையை வந்தடைந்த டொனால்ட் லூ, கொழும்பில் உயர்மட்ட அரசியல் தலைமைகள் பலருடனும் சந்திப்புக்களை நடத்தவுள்ளார். இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர் கலந்துரையாடவுள்ளார்.

அதுமாத்திரமன்றி இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்க வழங்கிவரும் ஒத்துழைப்பு தொடர்பில் மீள் உத்தரவாதத்தை வழங்கவுள்ள அவர், சுதந்திரமான ஜனநாயக சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையாக சிவில் சமூகத்தை வலுவூட்ட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தவுள்ளார். (அ)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி...

நால்வரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதவான் உத்தரவிட்டார். (அ)

## குடும்பமொன்றின்...

2023ஆம் ஆண்டில் குடும்பமொன்றுக்கான மாதாந்த நுகர்வு செலவு 103,283 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

2022ஆம் மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் ஒரு குடும்பமானது உணவு அல்லாத பொருட்களுக்கு அதிகம் செலவிட்டுள்ளதாக தெரியவந்தள்ளது.

அதன்படி, 2022ஆம் ஆண்டில் இந்நாட்டில் குடும்பமொன்றின் மாதாந்த நுகர்வு செலவில் 53.9 வீதம் உணவு அல்லாத பொருட்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

மாதாந்த நுகர்வு செலவில் 46.12 வீதம் மாத்திரமே உணவுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில் இந்நாட்டில் குடும்பமொன்றின் மாதாந்த நுகர்வு செலவில் 56.2 வீதம் உணவு அல்லாத பொருட்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

அதே ஆண்டில் உணவுக்காக 43.8 வீதம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஆண்டில் உணவு அல்லாத பொருட்களின் விலை அதிகரித்த நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது விலை அதிகரிப்பானது குறைவான மட்டத்திலேயே காணப்பட்டு வருகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## குருதிக்கொடை நிகழ்வு யாழில்!

யாழ்ப்பாணம், மே. 14

குருதியால் தோய்ந்த நம் தேசத்திற்காய் ஒரு துளி குருதி எனும் தொனிப்பொருளில் குருதிக் கொடை புரிவதற்கு முன்வருமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்ட நம்முயிர்த் தமிழ் மக்களை நினைவேந்தி குருதிக் கொடை செய்வோம் எனவும் குறித்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்று காலை 09.00 முதல் மாலை 03.00 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதன்மை வளாகத்தில் குறித்த குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும் உணர்வுரிமையுடன் அழைத்து நிற்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் மேலும் தெரிவித்துள்ளது.

## முறிகண்டியில் ஆணின் சடலம் மீட்பு!

கிளிநொச்சி, மே. 14

முறிகண்டி பிரதேசத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு பின் பகுதியிலேயே இவ்வாறு சடலம் அடையாளம் காணப்பட்டது.

சடலம் ஒன்று காணப்படுவது தொடர்பில் மாங்குளம் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அது வவுனியா ஊர்மிலாந்தோட்டம் பகுதியை சேர்ந்த 49 வயதுடைய ஆசீர்வாதம் என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்ற முல்லைத்தீவு நீதிமன்ற மேலதிக நீதவான் சடலத்தை பார்வையிட்டதுடன், கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து சென்று பிரேத பரிசோதனை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு அறிவுறுத்தினார். (அ)

# சுகாதார தொழிற்சங்கங்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பு!

### நேற்று முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ள தீர்மானம்

கொழும்பு, மே. 14

**தங்களுடைய பிரச்னைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காத காரணத்தினால் நேற்று முதல் மீண்டும் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக 72 சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.**

தங்களுக்கான 35,000 ரூபாய் கொடுப்பனவை வழங்குமாறு வலியுறுத்தி 4 மாதங்களுக்கு முன்னர் 72 சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.

இருப்பினும், சுகாதார அமைச்சினால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் குறித்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஏப்ரல் மாதம் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

ஆனால், இதுவரையில் அந்த வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படாதமையால் மீண்டும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்திற்கொண்டு, நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பை ஆரம்பிக்காது, மாகாண ரீதியாக அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் இன்று முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று மத்திய மாகாணத்திலும், இன்று சப்ரகமுவ மாகாணத்திலும், எதிர்வரும் 15ஆம் திகதி வடமேல் மகாணத்திலும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 16ஆம் திகதி தென் மகாணத்திலும், 20ஆம் திகதி ஊவா மகாணத்திலும், 21ஆம் திகதி நாடளாவிய ரீதியிலும் பணிப்புறக்கப்பில் ஈடுபடவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சம்பளப் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் கடந்த 2 ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

# தாமரை கோபுரத்தில் பரசூட் சாகசம் புரிந்த வெளிநாட்டவர் ஒருவர் காயம்

கொழும்பு, மே. 14

கொழும்பு தாமரை கோபுரத்தில் பரசூட் சாகச விளையாட்டில் ஈடுபட்ட வெளிநாட்டவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சாகசத்தில் ஈடுபடுவதற்காக 35 வெளிநாட்டவர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தாமரை கோபுரத்தின் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தாமரை கோபுரத்தின் மேல் பகுதியில் இருந்து கீழ் நோக்கி குதித்த சந்தர்ப்பத்தில் அவர்களில் ஒருவரின் பரசூட்டை விரிப்பதற்கு தாமதமானமையினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

காயமடைந்த வெளிநாட்டவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர் அமெரிக்க பிரஜை என கொழும்பு தேசிய வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்ட தீர்த்தக் குடம்

முல்லைத்தீவு, மே. 14

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தின் மிகச் சிறப்பம்சமாகக் காணப்படுகின்ற உப்பு நீரில் விளக்கு எரிப்பதற்காக தீர்த்தமாடும் உற்சவம் நேற்று திங்கட் கிழமை மிகவும் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது.

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து முல்லைத்தீவு பெருங்கடலிலே தீர்த்தம் எடுப்பதற்காக தீர்த்தக்குடம் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய வீதிகளூடாக முல்லைத்தீவு பெருங்கடலை நோக்கி கொண்டு செல்லப்பட்டது.

முல்லைத்தீவு பெருங்கடலுக்குத் தீர்த்தக்குடம் கொண்டு செல்லப்பட்டு அங்கு விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து முல்லைத்தீவு பெருங்கடலில் தீர்த்தம் எடுக்கப்பட்டு வழமை போன்று பாரம்பரிய வழிகளுடாக மீண்டும் முளளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தை வந்தடைந்து அங்கே லவிசேடமாக உப்பு நீரில் விளக்கெரிகின்ற காட்சி இடம்பெற உள்ளது. (அ)



## 69 வீதமான ரயில் சேவைகள் தாமதம்

கொழும்பு, மே. 14

கடந்த ஆண்டில் மாத்திரம் 69 வீதமான ரயில்கள் தாமதமாக வருகைத் தந்துள்ளதாக தேசிய கணக்காய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.

அந்த எண்ணிக்கை 69,594 எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, சரியான நேரத்தில் வருகைதந்துள்ள ரயில்களின் எண்ணிக்கை 36,053 அதாவது 34 வீதமானவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பயணிக்க திட்டமிடப்பட்ட ரயில் சேவைகளின் எண்ணிக்கை 113,759 ஆகும். எனினும், பயணிக்கப்பட்ட ரயில் சேவைகளின் எண்ணிக்கை 105,048 ஆகும்.

இந்நிலையில், 15,069 ரயில் சேவைகள் 6-10 நிமிடங்கள் வரையில் தாமதிக்கப்பட்டுள்ளன.

11-30 நிமிடங்கள் வரையில் 33,069 ரயில் சேவைகள் தாமதிக்கப்பட்டுள்ளன.

31-60 நிமிடங்கள் வரையில் தாமதிக்கப்பட்டுள்ள ரயில் சேவைகளின் எண்ணிக்கை 14,431 ஆகும்.

ஒரு மணித்தியாலத்தை விட அதிக நேரம் தாமதமடைந்த ரயில் சேவைகளின் எண்ணிக்கை 7,022 எனவும் அறிக்கை தெரிவிக்கின்றது. மேலும், கடந்த 2020ஆம் ஆண்டில் திட்டமிட்ட ரயில் சேவைகளின் எண்ணிக்கை 112,483 எனினும், 105,607 ரயில் சேவைகள் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளன. (அ)

# மக்கள் விரும்பினால் ஏனைய கட்சி உறுப்பினர்கள் இணைக்கப்படுவர்!

### ஜே.வி.பி புதிய அரசியல் வியூகம்

கொழும்பு, மே. 14

தேசிய மக்கள் சக்தியில் இணைய ஆர்வமுள்ள ஏனைய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை, பொது மக்கள் ஏற்றுக் கொள்வதாக ஏதேனும் சமிக்ஞைகள் கிடைத்தால் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழ் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் ஜே.வி.பியின் அரசியல் கூட்டணி என்று அழைக்கப்படும் தேசிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொள்ளப்படுவார்களா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி என்பது அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட மக்கள் தெரிவு என்பதால் ஏனைய கட்சி உறுப்பினர்கள் எங்களுடன் இணைய பொது மக்களின் விருப்பம் தேவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது கட்சிச் சின்னமான திசைகாட்டியைச் சுற்றி மேலும் அரசியல் பலங்களை இணைத்துக்கொள்வதற்கான ஒரு முயற்சி என அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org